"நான் நல்லதொரு
போராட்டத்தில் ஈடுபட்டேன்.
என் ஓட்டத்தை முடித்துவிட்டேன்.
விசுவாசத்தை காத்துக்கொண்டேன்." (2 திமொத்தேயு 4:7)

## வைகறை இல்லாத வைகாசி 2009



கொத்துக் குண்டு மழையில்
மனிதம் கொலை செய்யப்பட
செத்துக் கிடந்தவர்கள் நடுவில்
காலைத் தேடும் கைகளும்
மரித்த தாயிடம்
பாலைப் குடிக்கும் சிசுவும்
தந்தை இறந்தது அறிந்தும்
உயிர் தப்பியோடும் மகனும்
மொத்தக் குடும்பத்தில்
மிச்சமாய் நிற்கும் மகளுமாக

எம் இனமே
இதயத்தில் முள்முடி இறுகி
முள்ளிவாய்க்காலில் மரித்ததே

சர்வேஸ்வரா சுவாமி
தமிழரை என்ன செய்ய நினைத்தாய்!

துயர் துடைக்க ஓர் கரம்
எமை நோக்கி நீளாததும்
இறுதிப் படுகொலை இதுதானென்று
இவ்வுலகம் மௌனமாய் இருந்ததும்
ஏன் இறைவா?

நீர் தேர்ந்தெடுத்த
இஸ்ராயேல் மக்களைப் போல்
பன் நாடுகளின் ஆக்கிரமிப்புக்கு ஆளானோம்
சொந்த மண்ணில் அடிமையாய் இருந்தோம்
புவியெங்கும் புலம் பெயர்ந்தோம்
எங்கள் நிலத்தையும் இழந்தோம்
எங்கள் ஜெருசலேமையும் இழந்தோம்

ஆயினும் இறைவா
அவர்களை நீர் கைவிடவில்லை
வாக்கு கொடுத்த தேசத்திற்கு
அவர்களை அழைத்துச் சென்றீர்
அந்த நம்பிக்கையில்
உம்மிடம் வேண்டுகின்றோம்

துயர் மறக்கும் மனம் தாரும்
துன்புற்றோருக்கு ஆறுதலாய் இரும்
இழப்பில் இருந்து மீட்பை தாரும்
இருளில் இருப்பவர்க்கு ஒளியாய் இரும்
இன்னுயிர் நீத்த எம் மக்களுக்கு

நித்திய இளைப்பாற்றியை
அளித்தருளும் ஆண்டவரே!
முடிவில்லா ஒளி
இவர்கள் மீது ஒளிரக் கடவதாக!

- மகேன்.